


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திருவெறும்பூர் தொகுதி காட்டூர் ஆயில் மில் பகுதியில் திறந்து வைக்கப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் அமைச்சர் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா, மாநகர செயலாளர் மு.மதிவாணன், சட்டமன்ற உறுப்பினர்கள் இனிகோ இருதயராஜ், அப்துல் சமது, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.என்.சேகரன், பகுதி செயலாளர் ஓ. நீலமேகம் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.




# நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்... முதல்வர் திறப்பு!

முதல் பக்கத் தொடர்ச்சி...

அதன்படி, அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டத்தில் 3000 மெ. டன் கொள்ளளவில் 4 கோடியே 96 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வட்ட செயல்முறை கிடங்கு, திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டத்தில் 2000 மெ. டன் கொள்ளளவில் 4 கோடியே 2 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வட்ட செயல்முறை கிடங்கு, சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டத்தில் 3000 மெ.டன் கொள்ளளவில் 5 கோடியே 23 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வட்ட செயல்முறை கிடங்கு, சிவகங்கை மாவட்டம், சிங்கம்புனரி வட்டத்தில் 3000 மெ.டன் கொள்ளளவில் 4 கோடியே 96 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வட்ட செயல்முறை கிடங்கு, வேலூர் மாவட்டம், பக்களப்பள்ளி வட்டத்தில் 2000 மெ.டன் கொள்ளளவில் 4 கோடியே 2 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வட்ட செயல்முறை கிடங்கு, திருவள்ளூர் மாவட்டம், இராம கிருஷ்ணராஜபேட்டை வட்டத்தில் 2000 மெ.டன் கொள்ளளவில் 3 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வட்ட செயல்முறை கிடங்குகள், என 26 கோடியே 97 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 வட்ட செயல்முறை கிடங்கு வளாகங்கள்;

விவசாயிகளின் நலன் கருதி டெல்டா மாவட்டங்களான திருவாரூர் மாவட்டத்தில் தோலி, கற்பகநாதர் குளம், பழையவலம், மேலவாசல் மற்றும் ஆலத்தூர் ஆகிய 5 கிராமங்களிலும், மயிலாடுதுறை மாவட்டத்தில் பெருந்தோட்டம், பெருமங்கலம், காஞ்சிவாய் ஆகிய 3 கிராமங்களிலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் குறுமாணக்குடி மற்றும் மேலவாழக்கரை ஆகிய 2 கிராமங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் பெருங்களூர் கிராமத்திலும் என 11 கிராமங்களில் தலா 62 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் மொத்தம் 6 கோடியே 87 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 11 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்;

விவசாயிகளின் கடின உழைப்பில் உற்பத்தியாகி கொள்முதல் செய்யப்படும் ஒரு நெல்மணிக்கூட வீணாகக் கூடாது என்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சொல்லை செயல் வடிவமாக்கும் விதமாக 2023-24 நிதியாண்டில் அறிவிக்கப்பட்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு தளங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

அதன்படி டெல்டா மாவட்டங்களான திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், மூவாநல்லூர் கிராமத்தில் 20 கோடியே 90 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 33,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு தளங்கள், தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், நீலத்தநல்லூர் கிராமத்தில்

8 கோடியே 86 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 13,500 மெ.டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு தளங்கள் மற்றும் டெல்டா அல்லாத பிற மாவட்டங்களான காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜபாத் வட்டம், கட்டவாக்கம் கிராமத்தில் 14 கோடியே 42 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 15,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு தளங்கள், செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், சிலாவட்டம் கிராமத்தில் 14 கோடியே 42 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 15,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு தளங்கள், என 58 கோடியே 61 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4 மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு தளங்கள்;

என மொத்தம் 92 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 வட்ட செயல்முறை கிடங்கு வளாகங்கள், 11 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், 4 மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு தளங்கள் ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

மேலும், பொது விநியோக திட்டத்திற்கு பயன்படுத்தப்படும் வட்ட செயல்முறை கிடங்குகளின் கொள்ளளவினை மேம்படுத்தும் வகையில் செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், செய்யூர் கிராமம் மற்றும் திருப்போரூர் வட்டம், செம்பாக்கம் கிராமம், புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டம், கொன்னையூர் கிராமம், கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், சிவாயம் கிராமம், திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி வட்டம், திருமழிசை கிராமம், திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், லக்கயன்கோட்டை கிராமம் ஆகிய இடங்களில் மொத்தம் 6000 மெ.டன். கொள்ளளவுடன் 10 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 6 கூடுதல் வட்ட செயல்முறை கிடங்குகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி. ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் க. நந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விருதுநகர் மாவட்டம் – சிவகாசி வட்டம் – ஆனையூர் கிராமத்தில் தனியார் பட்டாசு ஆலை வெடி விபத்து!

# உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

விருதுநகர், பிப். 21-

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், ஆனையூர் கிராமத்தில் இயங்கிவரும் தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ளதுடன் நிதியுதவி வழங்கிடவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், ஆனையூர் கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் 19.02.2025 அன்று மாலை எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் சிவகாசி வட்டம், திருத்தங்கல், திருவள்ளுவர் காலனியைச் சேர்ந்த சுரேஷ் (வயது 38) த/பெ.செல்வராஜ் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் பால்பாண்டி (வயது 31) த/பெ.பிச்சைக்கனி என்பவருக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு நான்கு இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# “சிங்கப்பூரில் முத்தமிழறிஞர் கலைஞர்” நூல் வெளியீட்டு விழா!

## சென்னையில் கி.வீரமணி தலைமையேற்று வெளியிடுகிறார்!

*சென்னை, பிப். 21-*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒரே ஒருமுறை சிங்கப்பூருக்கு 1999ஆம் ஆண்டு அரசு முறைப் பயணம் மேற்கொண்டார்.*

*அந்தப் பயணம் குறித்த தகவல்கள், செய்திக் குறிப்புகள், தலையங்கங்கள், புகைப்படங்கள், உரையாற்றிய பேச்சு, நடத்திய சந்திப்புகள் எனப் பல்வேறு தகவல்களை ஆவணப்படுத்தும் நூல் வெளியீட்டு விழா சென்னையில் நாளை (22.2.2025 - சனிக்கிழமை) சென்னை மயிலாப்பூர், சி.ஐ.டி. காலனியில் அமைந்துள்ள கவிக்கோ மன்றத்தில் நடைபெறுகிறது.*

*‘செம்மொழி’ சமூக, இலக்கிய இதழின் ஆசிரியரும் சிங்கப்பூர் தமிழவேள் நற்பணி மன்றத்தின் செயலாளருமான எம்.இலியாஸ் எழுதித் தொகுத்துள்ள இந்நூலை திராவி டர் கழகத் தலைவர், கி.வீரமணி அவர்கள் தலைமையேற்று வெளியிடுகிறார்.*

*நூலைப் பெற்றுக் கொண்டு, இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் தேசியத் தலைவர் பேராசிரியர் கே. எம்.காதர் மொகிதீன் , நாடாளுமன்ற உறுப்பினரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைப் பரப்புச் செயலாளருமான திருச்சி சிவா எம்.பி. ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.*

*கலைஞரின் சிங்கப்பூர் வருகையின்போது சிங்கப்பூரில் தமிழ் முரசு நாளிதழில் பணியாற்றிவந்த இன்றைய தூத்து க்குடி தொகுதி இந்திய நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளருமான கலைஞரின் புதல்வி கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கடந்த செப்டம்பர் 1 ஆம் தேதி (1.9.2024) சிங்கப்பூரில் இந்நூலை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார் என்பது நினைவு கூரத்தக்கது.*

*சிங்கப்பூரின் அன்றைய தொடர்பு, கலைகள் அமைச்சராகவும் வர்த்தக, தொழில் இரண்டாம் அமைச்சராகவும் பொறுப்புவகித்த பிரிகேடியர் ஜெனரல் ஜார்ஜ் இயோவின் அழைப்பை ஏற்று தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவி வகித்த முத்தமிழறிஞர் கலைஞர், அன்றைய பிரதமர் கோ சோக் டோங் உட்பட பல்வேறு அரசியல் தலைவர்களுடனான சந்திப்புகளை இந்த மூன்று நாள் வருகையின் போது மேற்கொண்டார்.*

*‘தமிழ் அலை’ பதிப்பகம் மற்றும் ‘செம்மொழி’ சமூக இலக்கிய இதழின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்ச்சி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்குத் தொடங்கும். மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை நிகழ்ச்சி நடைபெறும்.*

தி.மு.கழகத் தகவல் தொழில்நுட்ப

# மாநில துணைச் செயலாளர்கள் - மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## அணி செயலாளர் – அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

*சென்னை, பிப். 21-*

*தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் - அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-*

*கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில துணைச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகிகளின் கூட்டம், 24.02.2025 திங்கள் கிழமை மாலை அன்பகத்தில் நடைபெற உள்ளது.*

*பொருள்: கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் நலத்திட்ட பணிகள்.*

*2026 சட்டமன்ற தேர்தல் பணிகள்*

*பாக(AC3) ஒருங்கிணைப்பாளர்கள் நியமனம்*

*கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் ஆக்கப் பணிகள்*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

# தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு - மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

## செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி., அறிவிப்பு!

தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக் குழு மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 24-02-2025 திங்கட் கிழமை மாலை 4.00 மணியளவில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் எனது (இரா.கிரிராஜன்) தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சட்டதிட்டத் திருத்தக்குழு மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :

1. தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள்

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 19.02.2025

**இரா.கிரிராஜன் எம்.பி.**
செயலாளர் - தி.மு.க.
சட்டதிட்டதிருத்தக் குழு

இளையான்குடி வட்டத்தில்

# கண்மாயில் மூழ்கி உயிரிழந்த 2 சிறுமிகளின் குடும்பத்திற்கு தலா ரூ.3 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, பிப். 21 -**

**சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம், ஆழிமதுரை கிராமத்திலுள்ள கண்மாயில் மூழ்கி உயிரிழந்த சிறுமிகளின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதி உதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வருமாறு:-**

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம், ஆழிமதுரை கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மூன்றாம் வகுப்பில் பயின்று வந்த சிறுமி சோபியா (வயது 8) த/பெ. சசிகுமார் மற்றும் அங்கன்வாடி மையத்தில் படித்துவந்த சிறுமி கிருஷ்மிகா (வயது 4) த/பெ.கண்ணன் ஆகிய இருவரும் 19.02.2025 அன்று காலை பள்ளியின் எதிர்புறம் உள்ள கண்மாய்க்குச் சென்றபோது எதிர்பாராதவிதமாக கண்மாயில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியை கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

இச்சம்பவத்தில், உயிரிழந்த சிறுமிகளின் பெற்றோருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதல்களையும் தெரிவித்துக்கொள்வதோடு அவர்களது பெற்றோருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; இந்தியப் பொருளாதாரம் வளர்ந்து வருகிறது - என பா.ஜ.க.வினர் வாய் நீளம் காட்டுகிறார்களே?

**பெரியதம்பி : ஆமாம் தம்பி; டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு படுவீழ்ச்சி; வர்த்தகப் பற்றாக்குறை வானளவு உயர்வு; இறக்குமதி அதிகரிப்பு; ஏற்றுமதி சரிவு; வேலை வாய்ப்புகள் எங்கே எனத் தேடும் நிலை; விலைவாசி தொடர்ந்து உயர்வு; நொறுங்கிப்போய்விட்ட நுகர்வோர் எதிர்பார்ப்பு!**

**இத்தகைய சூழலில் இந்தியப் பொருளாதாரம் வளருகிறது என்றால்; இந்தியர்கள் ‘கேனையர்களாக இருந்தால் அல்லவா, கேப்பையில் நெய் வடிகிறது’ என்பதை நம்புவார்கள்!**